Volume 3 Issue 2 February 2022 E-ISSN: 2582-2063

# அஞ்சல் தலை வரலாறும், சேகரிப்பும் - ஒரு பார்வை

**முனைவர் ம.ராஜவேல்**
*நூலகர், தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை*

**முன்னுரை**

அஞ்சல்தலை என்பது ஒரு நாட்டின் பண்பாடு, கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் கருவி ஆகும. தற்பொழுது ஒரு நாட்டின் வரலாற்று ஆதரங்களாக அஞ்சல் தலையும் இருக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை ஆய்வு செய்வதில் குழப்பம் இல்லை. ஏனென்றால் ஒவ்வொரு அஞ்சல்தலையும் வெளியிடப்பட்ட காரணங்கள், விளக்கங்கள், தெளிவாக அச்சில் வெளியிடப்பட்டுள்ளன. அஞ்சல் தலை சேகரிப்பு முதலில் பொழுதுபோக்காக சேகரித்தவர்கள் இன்று இதன் அருமை அறிந்து மிகுந்த கவனத்துடன் சேகரித்து பாதுகாத்து வருகின்றனர். இன்று இவை குடும்பச்சொத்துப்போல் கருதப்படுகின்றன. பொருளாதார ரீதியாகவும் நல்ல பலன்கள் கிடைக்கின்றன. அஞ்சல் தலைகளை முறைப்படி சேகரித்து பாதுகாக்கும் வழிமுறைகள் மாணவர்களுக்கு குறிப்பாக வரலாற்றுத்துறை மாணவர்களுக்கு கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும். மேலும் அஞ்சல்தலை வரலாறும் தோற்றமும், வளர்ச்சியும், அதன் வகைகளும், அஞ்சல்தலை சேகரிப்புக்கலை மற்றும் அஞ்சல் தலைகளை சேகரிக்கும் முறைகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

**அஞ்சல்தலை வரலாறு (தோற்றமும், அதன் வளர்ச்சியும்)**

அஞ்சல்தலை பற்றி ஜார்ஜ் ஹெர்பின்ஸ் என்ற அறிஞர் கி.பி.1864ம் ஆண்டு இரண்டு கிரேக்கச் சொல்லை இணைத்து இச்சொல்லை உருவாக்கினார். PHILOS என்ற சொல்லும் ATELEIA என்ற சொல்லும் இணைந்து PHILATELY என்ற சொல் உருவானது. இதன் பொருள் நேசத்துடன் கட்டணத்திலிருந்து விடுவிப்பு எனப் பொருள்படும்.

கடிதங்கள் அனுப்பும்போது அதற்குரிய கட்டணமாக அஞ்சல்தலைகளை ஒட்டி அனுப்புவதால் அதனை பெறுகிறவர் கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்படுகிறார். தொடக்க கால அஞ்சல்துறை நடைமுறையானது, கடிதத்தை பெறுகிறவர்தான் கட்டணத்தைச் செலுத்தவேண்டும் என்று இருந்தது. அஞ்சல்தலை உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்த பின்பு, கடிதத்தை பெறுகிறவர் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றதனால் கடிதம் பெறுகிறவருக்கு ஒரு மகிழ்வை தருகின்றது. எனவேதான் நேசத்துடன் கட்டணத்திலிருந்து விடுவிப்பு என்றப் பொருளமைந்த PHILATELY என்ற சொல் உருவாக்கப்பட்டது என்பர்.

அஞ்சல் சேவையை பெறுவதற்கும் அஞ்சல் மூலம் செய்திகளை தெரிவிப்பதற்கான அஞ்சலகப் பொருட்களை பெறுவதற்கும் முன் கூட்டியே செலுத்தும் கட்டணத்திலிருந்து உரிய சான்றுதான் அஞ்சல்தலை ஆகும். அஞ்சல்தலைகளை வாங்கி நாம் அனுப்பும் கடிதங்கள் மற்றும் உறைகளின் மீது ஒட்டி அனுப்புகிறோம். இவ்வஞ்சல்தலை முதன்முதலில் உருவானது இங்கிலாந்து நாட்டில்தான்.

அஞ்சல்தலையில் நாட்டின் பெயர் பொறிக்காமல் அச்சிடப்பட்ட நாடு இங்கிலாந்து மட்டும்தான். ஆனால் மற்ற அனைத்து நாட்டு அஞ்சல்தலைகளிலும் அதன் பெயரினை தாங்கி நிற்கும்.

கி.பி.1840ல் இங்கிலாந்தில் முதன்முதலாக அஞ்சல்தலை பயன்பாடு நடைமுறைக்கு வந்தது. பின்பு கி.பி.1843 பிரேசில், ஜெனிவா, சுவீட்சர்லாந்து போன்ற நாடுகளும், கி.பி.1847 அமெரிக்காவும், 1849 பிரான்சும், 1852ல் இந்தியாவில் முதல் அஞ்சல்தலை வெளியீடு வளர்ச்சி பெறத் தொடங்கியது.

**அஞ்சல் தலையின் வகைகள்**

நாம் அஞ்சல் நிலையங்கள் மூலம் கடிதங்களை அனுப்பும்போது அதற்கான சேவைக்கட்டணம் செலுத்த வேண்டும். முன்கூட்டியே கட்டணம் செலுத்துவதற்கு பெறக்கூடிய பற்றுச்சீட்டுதான் அஞ்சல் வில்லை அல்லது அஞ்சல் தலை எனப்படும். இதில் இரண்டு வகைகள் உள்ளன. அவை

அ. பசைதடவிய அஞ்சல்தலை

ஆ. முத்திரைப் பதிக்கப்பட்ட அஞ்சல்தலை.

பசை தடவிய அஞ்சல்தலைகளை விலைக்கு வாங்கி நமது சொந்தக் கடிதங்கள் அல்லது உறைகள் மீது ஒட்டி அனுப்புகிறோம். இதற்கு பசை தடவியுள்ள அஞ்சல்தலை எனப்பெயர்.

மற்றொன்று அஞ்சல் உறைகள் மற்றும் அஞ்சல் அட்டைகளில் அஞ்சல் தலை போன்ற வடிவமைப்புகள் அச்சிடப்பட்டிருக்கும். இவற்றில் பசை தடவியுள்ள அஞ்சல்தலைகளை ஒட்டவேண்டிய அவசியமில்லை.

பசை தடவப்பட்ட அஞ்சல்தலைகளை ஏழு வகைகளாகப் பிரிக்கலாம்.

அ. சாதாரண அஞ்சல்தலைகள்

ஆ. நினைவு நாள் அஞ்சல் தலைகள்

இ. வான் அஞ்சல் தலைகள்

ஈ. அரசு அலுவலக அஞ்சல் தலைகள்

உ. தற்காலிக அஞ்சல் தலைகள்

ஊ. இராணுவ சேவை அஞ்சல் தலைகள்

எ. அறச்செயல் அஞ்சல்தலைகள்.

**அஞ்சல்தலை சேகரிப்புக்கலை**

அஞ்சல் தலைகள் சேகரிப்பு ஒரு சிறந்த பயனுள்ள பொழுதுபோக்காகும். இங்கிலாந்தில் உயர்குடியினரிடத்தும் அரசக் குடும்ப உறுப்பினரிடத்தும் அஞ்சல் தலை சேகரிக்கும் பழக்கம் இருந்து வந்துள்ளது. எனவே தான் பொழுதுபோக்குகளிலே உயர்ந்தது அஞ்சல் தலை சேகரிப்பு (KING OF HOBIES) என்றும், அரசர்களுடைய பொழுதுபோக்கு (HOBBY OF KINGS) அஞ்சல்தலை சேகரிப்பு என்றும் அழைத்தனர். அஞ்சல்தலை சேகரிக்கும் உற்சாகமான ஆர்வம் அஞ்சல்தலை தோன்றிய ஆரம்ப காலத்திலேயே எங்கும் பரவ ஆரம்பித்தது. தொடக்க காலத்தில் அஞ்சல்தலை சேகரிப்பாளர்கள் ஒட்டுமொத்தமாகவே தலைகளைச் சேகரிக்க ஆரம்பித்தார்கள். அஞ்சல் தலைகளை வகைப்படுத்தியோ, வரிசைப்படுத்தியோ இவர்கள் சேகரிக்கவில்லை. பிறகு அஞ்சல்தலை சேகரிக்கும் கலையில் வரிசைப்படுத்துதல், வகைப்படுத்தல், அலங்காரப்படுத்துதல் முதலிய நல்ல அம்சங்கள் படிப்படியாக வளர்ச்சி பெற ஆரம்பித்தன.

அஞ்சல்தலைகள் ஒரு நாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டை கடல் கடந்தும் மற்ற நாடுகளில் வசிக்கும் மக்களுக்குத் தெரிவிக்கும் பலகணிகள் ஆகும். அவை ஒரு நாட்டின் வாணிபம், வரலாறு, கலை, இயற்கை, அறிவியல் மற்றும் கைவினைத் திறன் உட்பட எல்லாக்கூறுகளையும் முன்னிறுத்துகின்றன. அஞ்சல்தலை சேகரிப்பது ஒரு சாதாரண பொழுதுபோக்காக இல்லை. அது ஆழ்ந்து பயிலக்கூடிய ஒரு அறிவார்ந்த கலையாக மாறி நிற்கிறது. அஞ்சல்தலைகளை ஆர்வமோடு ஆராய்பவர்களுக்கு பல்வேறு நாடுகளின் புவியியல், வரலாறு, வனவிலங்குகள், பறவைகள், இயற்கை சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பற்றிய நல்ல புலமை கிடைக்கும். எனவே ஓர் அஞ்சல் தலை தொகுப்பேடு ஒரு பொது அறிவு நூலாகவும் ஓர் ஆராய்ச்சி நூலாகவும் விளங்குகிறது.

**அஞ்சல் தலைகளைச் சேகரிக்கும் முறைகள்**

நம் வீடுகளுக்கு வரும் அஞ்சல் உறைகளைக் கூர்ந்து பாருங்கள். சிறந்த அஞ்சல்தலைகளைத் தாங்கிய உறைகளிலிருந்து அஞ்சல் தலைகளைப் பிரித்தெடுக்க வேண்டும். உறைகளிலிருந்து அஞ்சல் தலைகளை அப்படியே உரித்தெடுத்தல் கூடாது.

ஏனெனில் உரித்தெடுக்கும்போது தலைகள் கிழிய அதிக வாய்ப்பு உள்ளது. எனவே உறைகளில் அஞ்சல்தலை ஒட்டிய பகுதியை சிறிது இடைவெளிவிட்டுக் கத்தரித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கத்தரித்து எடுக்கப்பட்ட அஞ்சல்தலை ஒட்டிய உறைப் பகுதியை ஒரு நீர் நிரம்பியக் கிண்ணத்தில் மிதக்கவிட்டு சிறிதுநேரம் ஊறவிடவேண்டும். கத்தரித்து எடுக்கப்பட்ட உறைப்பகுதியிலிருந்து இப்பொழுது அஞ்சல்தலைகளை எளிதாகக் கிழியாமல் உரித்தெடுத்துவிடலாம். பிறகு இந்த அஞ்சல் தலைகளின் புறத்திலுள்ள அதிகப்படியான பசையை நீக்கி மை ஒற்றும் தாளில் ஈரம்போக ஒற்றிஎடுத்து சிறிது நேரம் உலரவிட்டு கனமான புத்தகங்களின் உள்ளே வைத்து அழுத்தமாக ஒரு நாள் வைத்திருக்கவேண்டும்.

இவ்வாறு எடுக்கப்பட்ட அஞ்சல் தலைகளை வகைகளுக்கேற்ப பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்ட உறைகளில் பத்திரமாகச் சேகரித்து வைக்க வேண்டும். அஞ்சல்தலைகளை மேலும் இரண்டுவிதமாகப் பெறலாம். நம்மிடம் அதிகப்படியாக உள்ள ஒரே மாதிரியான அஞ்சல் தலைகளை மற்றவர்களிடம் பரிமாற்றம் செய்து நம்மிடம் இல்லாதவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். கடைகளிலிருந்தும் முத்திரை இடப்பட்ட அஞ்சல்தலைகளை விலைக்கு வாங்கலாம். அவ்வாறு வாங்கப்படுபவை போலிகளாயிருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது. ஆகவே மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும்தான் கடைகளில் வாங்கவேண்டியுள்ளது.

**முடிவுரை**

அஞ்சல்தலைகள் என்பது ஒரு நாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டை கடல்கடந்தும் மற்றநாடுகளில் வசிக்கும் மக்களுக்கு தெரிவிக்கும் காரணிகள் ஆகும். அவை ஒரு நாட்டின் வாணிபம், வரலாறு, கலை, இயற்கை, அறிவியல் மற்றும் கைவினைத்திறன் உட்பட எல்லாக்கூறுகளையும் முன்னிறுத்துகின்றன. அஞ்சல்தலை சேகரிப்பு என்பது ஒரு பொது அறிவு நூலாகவும், ஒரு ஆய்வு நூலாகவும் விளங்குகிறது. அஞ்சல்தலை சேகரிப்பு புகழ் வளர ஆரம்பித்தவுடன் ஒவ்வொரு நாடும் அதன் பல்வேறு துறைகளின் வளர்ச்சியையும், சாதனைகளையும் மற்ற நாடுகளுக்கு தெரியப்படுத்த உதவும் ஆயுதமாக அதனை பயன்படுத்துகின்றனர். ஒரு அஞ்சல்தலையை வைத்து அந்தந்த நாடுகளின் வரலாறும், கலாச்சாரமும் உள்ளடக்கிய அனைத்து செய்திகளையும் தருவது மட்டுமல்லாமல் அரசியல் நாகரீகத்தையும் தெள்ளதெளிவாக எடுத்துக்கூறுவன. இந்த அஞ்சல்தலை சேகரிப்பு கலையை பாதுகாப்பதற்காக அனைத்து பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் இதனை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்றும் ஒவ்வொரு ஆண்டும், பள்ளி, கல்லூரி அளவில் அஞ்சல்தலை சேகரிப்பு போட்டி நடத்தி அந்த கலையை வளர்க்க அனைவரும் பாடுபடுவோம் என்று மனதார வாழ்த்துவோம்.

**நூற்பட்டியல்**

1. நாணயவியலும் அஞ்சலியலும், முனைவர் குரு.ஜெகந்நாதன், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், சென்னை.
2. Google.search
3. Indian postal stamps 1947-1988 philately branch Dept of posts .India.